<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 94/2022

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 1 |
| Name | : தேவிகா (வயது – 65) |
| Father's Name /W/o | : த/பெ கோவிந்தாச்சாரி |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : அரக்கோணம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 04.11.2025.

## <u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்திற்கு உரிமையாளர்கள் அண்ணன் மனைவி திருமகள், சசிரேகா, விஜயஸ்ரீ, என் தம்பி ஜீவரத்தினம், என் அக்கா ருக்மணி தேவி மற்றும் வாதிகள் நாங்கள் இருவரும் என்றால் சரிதான். நான் மற்ற கூட்டு உரிமையாளர்கள் அனுமதி வாங்கி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் அவர்களுக்கு தெரிந்து தான் தாக்கல் செய்தேன். என் அண்ணன் சண்முகத்தின் வாரிசுகள் எங்கே வசித்து வருகிறார்கள் என்றால் விலாசம் தெரியாது.

2. என் தம்பி ஜீவரத்தினம், ருக்மணிதேவி ஆற்காட்டில் வசித்து வருகிறார்களா என்றால் சரிதான். மேற்படி ஆற்காட்டில் அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் விலாசம் தெரியாது. என் தம்பி ஜீவரத்தினம், ருக்மணிதேவிக்கு தெரிந்து தான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். அவர்களுக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. என் தம்பி ஜீவரத்தினம் 18.10.2018 தேதியில் இருந்து காணவில்லை என்றாலம எனவே

அவர்களுக்கு தெரிந்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர் ஆற்காடில் தான் உள்ளார்.

3. என் அக்கா ருக்மணி தேவியிடம் எந்த தகராறு இல்லை என்றால் சரிதான். மேற்படி ருக்மணியிடம் எனக்கும் தற்போது நல்லபடியாக பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. என் தம்பி ஜீவரத்தினம் காணவில்லை என்று என் அக்கா ருக்மணிதேவி 28.11.2018 தேதியில் ஆற்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மற்ற கூட்டுதாரர்களுக்கு சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது எனக்காக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்களின் நலனை கருதிதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர்களுக்கு சார்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. என் தம்பி ஜீவரத்தினம் காணவில்லை என்று வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு தெரியும் என்றாலும் அவரை ஆற்காட்டில் வந்து தேடினேன் என்றால் இல்லை. மற்ற கூட்டு பங்குதாரர்களுக்கு நான் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல அவர்களுக்கு தெரியும். மேற்படி விபரத்தை மறைப்பதற்காக தான் கூட்டு உரிமையாளர்களின் விலாசத்தை தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கில் கூட்டு உரிமையாளர்களின் எனக்கு சாதகமாக சாட்சி அளிக்க அழைக்க தயாரா உள்ளேனா என்றால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் அவர்களின் நிலை தெரியாது அதனால் வருவார்களா என்று தெரியாது. எனவே நான் அவர்களை சாட்சி சொல்ல நடவடிக்கை எடுக்க போவதில்லை என்றால் அவர்களால் முடிந்தால் வருவார்கள். தாவா சொத்து கட்டிடம் எத்தனை வருடம் பழைமையானது என்றால் 40 ஆண்டுகள் பழைமையானது. நான் தாவா சொத்து வீட்டை கட்டுவதற்கு அரக்கோணம் நகராட்சியில் வீட்டின் கட்டிட அனுமதி வாங்கினேனா என்றால் என்

தந்தைக்கு தான் தெரியும்.

6. மேற்படி வீட்டு கட்டிட அனுமதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை என் தந்தை யாருக்கு எழுதி வைத்தார் என்றால் என் அண்ணன் சண்முகத்திற்கு 1977 ஆம் ஆண்டில் எழுதி வைத்தார். வழக்கு சொத்தை என் அண்ணன் யார் பெயருக்கு எழுதி வைத்தார் என்றால் வழக்கு சொத்தின் தெற்கில் பாதி பகுதி என் தாயாருக்கு எழுதி வைத்தார். வடக்கு பாதி பாகம் சொத்தை என்ன செய்தார் என்றால் 2001 ஆம் ஆண்டு சீனிவாசன் மற்றும் 2 பேருக்கு விற்றார்.

7. என் பிரமாண வாக்குமூலம் பத்தி 12 இல் துரதிஷ்டவசமாக சீனிவாசன் வகையறாக்கள் தாவா சொத்தின் வடக்கு பகுதியை 02.03.2006 தேதியில் பிரதிவாதிக்கு விற்றார்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் பிரதிவாதி நடத்தையில் எங்களுக்கு கோபம் ஏற்படுத்தியதால் நாங்கள் அந்த வார்த்தையை பயன்படுத்தினோம். 02.03.2006 தேதியில் கிரையம் கொடுத்தது எனக்கு மனமில்லை என்றால் அப்போது விற்றதை பற்றி எனக்கு தெரியாது.

8. தாவா சொத்தை 02.03.2006 தேதியில் பிரதிவாதி வாங்கியதிலிருந்து நான் தான் அவருக்கு பிரச்சினை கொடுக்கிறேன் என்றால் இல்லை. தாவா சொத்தின் வடக்கு பகுதியில் பிரதிவாதிதான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்து கட்டிடம் பழைமையானது என்று காண்பிப்பதற்கு கட்டிட பொறியாளரை அழைத்து காண்பித்து அவர் கொடுத்த சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. தாவா சொத்து கட்டிடத்தின் வடக்கு பகுதியை இடித்தால் தெற்கு பகுதியும் சேதம் அடையும் என்பதை என் யூகத்தின் அடிப்டையில் தான் சொல்கிறேன் என்றால் இல்லை. கட்டுமான பணி தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். கட்டுமான தொழில்நுட்பத்தில் கட்டிடங்களை இடிப்பதற்கு இயந்திரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தின் தெற்கு பகுதியில் உள்ளேன் என்றால் சரிதான். என் கட்டிடம் சேதம்

அடையாமல் பிரதிவாதி அவரது கட்டிடத்தை இடிக்க சம்மதமா என்றால் இல்லை ஏனென்றால் சேதம் அடையாமல் இடிக்க முடியாது.

10. என் தெற்கு பகுதி கட்டிடம் சேதம் அடையாமல் வடக்கு பக்கம் இடித்தால் எனக்கு சம்மதமா என்றால் இல்லை நிச்சயமாக சேதம் அடையும். கட்டுமான தொழிலில் பொறியாளர் பார்வையிட்டு சேதமடையாது என்று சொன்னால் வடக்கு பகுதியில் இருக்கும் கட்டிடத்தை இடிக்க எனக்கு சம்மதமா என்றால் இல்லை நான் நம்பமாட்டேன். வடக்கு பக்கம் இடித்தால் தெற்கு பக்கம் சேதம் அடையும் என்று பொறியாளரை அழைத்து நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11. இனிமேல் பொறியாளரை அழைத்து கட்டிடத்தை பார்வையிட நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எனக்கு சம்மதமா என்றால் நாங்கள் யோசித்து தான் சொல்லமுடியும். தற்போது உள்ள தொழில் நுட்பத்தில் தெற்கு பக்கம் சேதம் அடையாமல் வடக்கு பக்கம் கட்டிடத்தை இடிக்க பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் இல்லை எங்களுக்கு பாதிப்பு ஏற்படும். யூகத்தின் அடிப்படையில் EASEMENTARY RIGHTS கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு EASEMENTARY RIGHTS உள்ளது அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வடக்கு பக்கம் தாவா சொத்து பிரதிவாதிக்கு உரிமை உள்ளது அதை அனுபவிக்க எனக்கு எந்த வித உரிமை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி வடக்கு பக்கம் உள்ள சொத்தை எந்த காலத்திலும் இடிக்க கூடாது என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**